சுருக்கம்

உயர்கல்வி – 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கை பெறும் முதல் பட்டதாரி மாணவர்கள் – கல்விக் கட்டணச் சலுகை வழங்க ஆணை வெளியிடப்பட்டது – ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் பொறியியல் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டில் (Lateral Entry) சேர்க்கை பெறும் மாணவர்களுக்கும் கல்விக் கட்டணச் சலுகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.142 நாள் 9.6.2010.
வைகாசி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.85, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 16.4.2010.
2) தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் 1744/ஜே1/2010, நாள் 10.5.2010.

------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் இதுவரை பட்டதாரிகளே இல்லாத குடும்பத்திலிருந்து ஒற்றைச் சாளர முறையில் தொழிற்கல்வி பயில தேர்வு பெற்ற மாணவர்களுக்கு சாதிப் பாகுபாடின்றியும், வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும், அம்மாணவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் (Tuition Fee) முழுவதையும் அரசு ஏற்றுக் கொள்ள ஆணை வெளியிடப்பட்டதுடன், அதற்கான நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் தொழில்நுட்பக் கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் நேரடி இரண்டாமாண்டு பொறியியல் பட்டப் படிப்பிற்கான மாணவர் சேர்க்கையிலும் (Direct Second Year Lateral Entry B.E./B.Tech.) ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் அரசு, அரசு உதவிபெறும், சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருவதால் மேலே குறிப்பிட்டுள்ள அரசாணையில், குறிப்பிடப்பட்டுள்ள கல்விக் கட்டணச் சலுகையானது, 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் நேரடி இரண்டாமாண்டு பொறியியல் பட்டப் படிப்பில் சேரும் மாணவர்களில் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி தகுதியான மாணவர்களுக்கும் இத்திட்டம் பொருந்துமா என தெளிவுரை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கோரிக்கையை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, 2010–2011–ஆம் கல்வியாண்டுமுதல் அரசு, அரசு நிதியுதவி பெறும், சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அரசு நடத்தும் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் நேரடி இரண்டாமாண்டில் (Lateral Entry) சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளுக்குட்பட்டு, இத்திட்டம் பொருந்தும் என ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்1193/FS/P/2010, நாள் 28.5.2010–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை / திருச்சிராப்பள்ளி / கோயம்புத்தூர் / திருநெல்வேலி.
தலைமைச் செயலாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
ஆணையர், வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிக்கும் துறை,
சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (வட்டாட்சியர்களுக்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கும் பொருட்டு)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / 35.
நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி–1) துறை, சென்னை–9.
அனைத்து பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25 வழியாக)
இ.கோ. / உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.